# அரசு கலைக் கல்லூரி (தன்னாட்சி), நந்தனம், சென்னை – 600 035.

முனைவர் த. தங்கராஜன், M.A., M.Phil., Ph.D.
முதல்வர்

நாள் : 16.09.2025

அன்பார்ந்த மாணவர்களுக்கு,

வணக்கம், நம் கல்லூரியின் 47ஆவது பட்டமளிப்பு விழா 29.09.2025 மற்றும் 30.09.2025 ஆகிய இரண்டு நாட்களும் முற்பகல் மற்றும் பிற்பகல் என நடைபெற உள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவ்வமயம் மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு மா. சுப்பிரமணியம் அவர்கள், கல்லூரிக் கல்வி ஆணையர் திருமதி எ. சுந்தரவல்லி இ.ஆ.ப., அவர்கள், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் (திட்டம்), முனைவர் பா. சிந்தியா செல்வி அவர்கள், கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் (நிதி) முனைவர் இரா. இராமன் அவர்கள் ஆகியோர் பட்டங்களை வழங்கி பட்டமளிப்பு விழா வாழ்த்துரை மற்றும் உரை நிகழ்த்த இசைந்துள்ளனர். இவ்விழாவில் தாங்கள் கலந்து கொண்டு தங்களது பட்டச் சான்றிதழை நேரில் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இந்நிகழ்வில் நவம்பர் 2020 முதல் நவம்பர் 2023 வரை தேர்ச்சி பெற்ற மாணவர்கள் மட்டுமே பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பார்கள்.

**துறை வாரியாகப் பட்டம் பெறும் நாள் மற்றும் நேர அட்டவணை :–**

| நாள் (Date) | நேரம் (Time) | துறை (Department) |
|---|---|---|
| 29.09.2025 | முற்பகல் 09.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை | தமிழ் (Tamil) |
| | | வரலாறு (History) |
| | | பொருளாதாரம்(Economics) |
| 29.09.2025 | பிற்பகல் 01.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை | கணிதம் (Mathematics) |
| | | இயற்பியல் (Physics) |
| | | வேதியியல் (Chemistry) |
| 30.09.2025 | முற்பகல் 09.00 மணி முதல் மதியம் 12.00 மணி வரை | வணிகவியல் (Commerce) |
| | | நிறுமச்செயலரியல் (Corporate Secretaryship) |
| | | வணிக நிருவாகவியல் (B B A ) |
| 30.09.2025 | பிற்பகல் 01.00 மணி முதல் மாலை 04.00 மணி வரை | ஆங்கிலம் (English) |
| | | தாவரவியல் (Botany) |
| | | விலங்கியல், நீர்வாழ் உயிர் வளர்ப்பியல் (Zoology and Aquaculture) |
| | | கணினி அறிவியல்( Computer Science) |

குறிப்பு :-

பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கும் மாணவர்கள் 19.09.2025 – 24.09.2025 தேதிக்குள் ரூ.400/– (ரூபாய் நானூறு மட்டும்) நேரில் வந்து கல்லூரி அலுவலகத்தில் செலுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்(ஆவணக்கோப்பு, நினைவுப் பரிசு மற்றும் உபசரிப்புச் செலவு).

மேலும், பட்டம் பெறும் நாளில் ஒளி படத்திற்காகவும், பட்டமேற்பு அங்கிக்காகவும் ரூ.300/– (ரூபாய் முந்நூறு மட்டும்) முன் பணமாக செலுத்த வேண்டும்.

பட்டமேற்பு அங்கியை திரும்ப செலுத்தும் பட்சத்தில் விழா நிறைவு பெற்றவுடன் மீதம் ரூ.100/– (ரூபாய் நூறு மட்டும்) திருப்பி தரப்படும்.

மேலே குறிப்பிட்ட அட்டவணையில் ஒதுக்கப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் அந்தந்த துறையைச் சார்ந்த மாணவர்களுக்கு மட்டுமே பட்டம் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

16.9.25

முதல்வர்
அரசு கலைக் கல்லூரி, (தன்னாட்சி)
நந்தனம், சென்னை - 600 035.